குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 28 — 4 — 59 செவ்வாய் | இசை: 47

இதுவுமோர் பிழைப்பா?

கையிற் பெற்ற பதவி பெரிதா! – இனம்
காட்டிக் கொடுத்த பழி சிறிதா
சொல்லேடா (கையில்)

பையிற் பெற்ற பணந்தான் பெரிதா – இனப்
பகைவனைச் சேர்ந்த பழி சிறிதா
சொல்லேடா (கையில்)

பார்ப்பானைப் பிராமணன் என்ருய் – நீ
பதவிக் கவன் வீடுசென்ருய்;
தீர்ப்புக்கு வாய்பார்த்து நின்ருய் – நீ
செந்தமி ழர்மாண்பைக் கொன்ருய்!
சொல்லேடா (கையில்)

தமிழர்க் குழைப்ப தாய்மொ ழிந்தாய் – பின்பு
தன்மான மேகெட்ட ழிந்தாய்
உமிழ்பவன் வீடுநு ழைந்தாய் – நீ
ஊரில் நாயினும்இ ழிந்தாய்!
சொல்லேடா (கையில்)

எந்தமிழ்த் தாயைக் கசந்தாய் – கெட்ட
இந்தி வருவதற்கும் இசைந்தாய்!
வந்தா ரடியில் கண்ணீர் கசிந்தாய் – நீ
மாத்தமி ழுடன்நஞ்சைப் பிசைந்தாய்!
சொல்லேடா (கையில்)

தமிழர் இழப்புக் கொஞ்சம் இழப்பா? – பகை
தழைப்பது கொஞ்சம் தழைப்பா?
தமிழனை சாக உழைப்ப துழைப்பா?
தரம்கெட்டாய் இதுவும்ஓர் பிழைப்பா?
சொல்லேடா (கையில்)

நெட்டுக்காரி

கொஞ்சம் திரும்பிப் பாராயா? - நான்
கூப்பிடும் போதும் வாராயா?
நெஞ்சில் ஆசை தீராயா? - உன்
நேயம் எனக்குத் தாராயா?

கெஞ்சு மொழியும் கேளாதா? - நீ
கேட்டுத் திரும்ப மாளாதா?
தஞ்சம் அளிக்கத் தாளாதா? - உன்
தாராளம் என்னை ஆளாதா?

ஒருசொல் லுக்கும் பஞ்சமா? - என்
உள்ளக் கொதிப்புக் கொஞ்சமா?
இரும்பு தான்உன் நெஞ்சமா? - அடி
என்மேல் உனக்கு வஞ்சமா?

திருவி ளக்கடி வீட்டுக்கே! - நீ
செந்தமி ழடிஎன் பாட்டுக்கே!
உருவி ளக்கடி நாட்டுக்கே! - நீ
உயிரடி என் கூட்டுக்கே!

அன்னத்தொ டுநடைப் போட்டியா? - என்
ஆசைம னத்தினில் ஈட்டியா?
பின்னழ கைமட்டும் காட்டியா - நெஞ்சு
பிளந்த னைமையல் மூட்டியா?

முன்னழ கும்நகை முத்தழகும் - நல்ல
முத்தமிழ் கொட்டும்உ தட்டழகும்
என்னழகும் சேர்இ ரண்டழகும் - அடி
இன்பத்தி லேநீந் தப்பழகும்!

* * *

தொல்காப்பியம் குமரியாறு தமிழ்நாட்டின் தென்னெல்லையாக விளங்கிய காலத்தில் தோன்றியது. —கா. சுப்பிரமணியப்பிள்ளை, காக்கைப்பாடினியார்.

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௯௦ சித்திரை ௧௫

தொன்மை ஆராய்ச்சி III

<✱>

உலவு முதலிய சொற்களே சிறிதுசிறிது வேற்றுமை அடைந்து குலவு, சுலவு, துழவு முதலியவனவாகி நிற்கும் என்பதை நுணுகி ஆராய்ந்தால் புலப்படும். இவைகள் எல்லாவற்றிற்கும் உரிய பொருள் இன்னதெனக் கூறுவோம். உல-வு, உலா-வு (சுழலல், சுற்றி வரல்) "தூசுலாய்க் கிடந்த" (சிந்தாமணி ௫௫௦) அலைபோல விரிந்துசெல்லல். "ஒருங் குதிரை உலவு சடை" (திருவாசகம் ௩௮,௧) "வந்து உலாய்த் துயர் செய்யும் வாடை அசைவாடுதல்" (புறப்பொருள் வெண்பா மாலை ௮௧௬ கொளு)

உலவை. (சுழன்று வீசுவது) காற்று. சுழன்று வீசுவதால் சுழல் எனவும் வளைத்து வீசுதலால் வளி எனவும் பெயர் இருத்தலையும் காண்க. உலா-ஞ்சு (சுழன்று வீசல்) ஓரோர் பக்கத்திற்கு அசைந்தாடுதல் (வழக்கு)

உழ-ல் [சுற்றிவரல்] சுழலல் [பிங்கலந்தை] இக்கருத்து உழலை மரம் எனும் வழக்கினும் வெளிப்படும். உழலை மரத்தைப்போற் றெருட்டன [கலித்தொகை ௧. ௬] சுழன்று அசைதல் "சிறுகாற்றுழலும்" (கல்லாடம் கணபதி துதி) அலைதல், ஆட்பார்த் துழலும் அருளில் கூற்று (நாலடி ௨௦)

உலை (சுழலல், சுழன்று விரிதல்) சுழலல் எனும்பொருள் உலமரு (உலம்வரல்) என்னும் வழக்கில் நன்றாகப்போதரும். "வாயாவன்னிக்கு உலமருவோரே" (புறநானூறு ௨௦௭) கலைந்து போதல். "ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து" (பெரும்பாணாற்றுப்படை ௪௬௧) அழிதல் திவாகரம்.

உலை [சுழன்று விரிந்து செய்மையை நாடல்] கழிதல். "உலந்த பிறவி" (மணிமேகலை ௨௫,௧௩௫) "சாதல் உலந்தவன் தாரொடு" (புறப்-வெண். ௧௦ சிறப். பொது ௪)

குலவு, குலாவு(சுற்றிவரல்) வளைதல். "குலவுச்சினைப்பு" [புறம் ௧௧] அளவளாவல் "பாண் குலாய்ப்படுக்க" (சிந்தாமணி ௨௧௫)

குழை (முன்னது) வளைதல். "திண்சிலை குழைய" [சூளாமணி - அர ௩௧௬] நெருங்கி உறவாடல் [பிறவினை] உருண்டு திரளச்செய்தல் கருணையாற் குழைக்கும் கைகள் [சிந்தாமணி ௨௫௭]

குலை [சுழன்று விரிதல்] கலைதல், நிலை கெடுதல், அழிதல்

சுல-வு [முன்னது] சுழலல். சுற்றி வரல் "விரைகமழ் சோலை சுலாவி" [தேவாரம் ௪௧௮, ௧.]

சுலாவு [சுழன்றுவீசுவது] காற்று. உலவை சூறை, வளி என்னும் காற்றின் பெயர்களோடு இதனை ஒப்பு நோக்குக.

சுழல், சுற்று [உள் நோக்கி நோக்கிச் செல்லல்] உழன்று வரல், "தேர்க்காலாழியிற் சுழன்றவை" (பெருங்கதை வத்தவ ௧௨, ௨௦௫) அங்குமிங்கும் திரிதல், சோர்தல்.

சுழல். [சுழல்வது. சுழன்று வீசுவது] நீர்ச் சுழி, சூறைக் காற்று, காற்றுடி

துழவு.துழாவு (உள்நோக்கி நோக்கிவரச் செய்தல்) சுழலச் செய்தல், "வழையமை சாரல் கமழத் துழைஇ" (மலைபடுகடாம் ௧௮௧) சூழ வருதல் "மாதிரம் துழவும் கவலை நெஞ்சத்து" (புறம் ௧௭௪) சுலாவிப்பார்த்தல் "வானும் நிலனும் திசையும் துழாவும்" (கலித்தொகை ௧௪௫, ௪௩)

துழ - [முன்னது] சுழலச்செய்தல் "துடுப்பில் துழந்த வல்சி" [புறம் ௨௬]

(தொடர் 6-ம் பக்கம்)

கைப்புண் நோக்கக் கண்ணாடியா வேண்டும்?

என்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண் டுசிரிப் பாளா ?

அன்னநடை நடப் பாளா - என்
முன்னேமுன் னேவரு வாளா
தன்னுடை திருத்து வாளா - தன்
மின்னிடை குலுக்கு வாளா - அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண் டுசிரிப் பாளா ?

இப்படி வந்தால் தோளா - லெனை
இடித்துக் கொண்டு போ வாளா
அப்படிப் போகவி டாளா - என்
அடியை யும்மிதிப் பாளா - அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண் டுசிரிப் பாளா ?

காலங் கடத்தக் கூடா - தென்று
கையோ டுபடிப் பாளா - அவள்
ஆலம்பழத்தைப் பொறுக்கிப் பொறுக்கி
என்மேலே அடிப் பாளா - அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண் டுசிரிப் பாளா ?

கொல்லைக்கு நான்போம் போதே - அவள்
கொஞ்சும் கருங்குயில் போலே
மெல்லமெல்லப் பாடு வாளா - அவள்
வேலை மினக்கிடு வாளா - அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண் டுசிரிப் பாளா ?

என்நாய்க் குட்டிக்கு முத்தம் - அவள்
என்னெதி ரேகொடுப் பாளா
சின்னசிட் டுக்களின் கூடல் - கண்டே
என்னையும் பார்த்தழு வாளா - அவளுக்
கென்மேல் ஆசை இல்லாவிட்டால்
எனைக்கண் டுசிரிப் பாளா ?

★—★

தமிழ் வாழ்க !

நாற்பத் தொன்பதின்மரைக் கொண்ட

தமிழகப் புலவர் குழு

திருவள்ளுவராண்டு 1990, சித்திரைத் திங்கள் 6-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (19-4-59)

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற் கெழுந்தருளியகாலை,

சங்கத்தார் உளமுவந் துரைக்கும்

வரவேற்பு வாழ்த்துரை

பனிமலை அளவும் ஆட்சி பண்பொடு நண்பிற் செய்து
நனிபுகழ் இலக்கி யங்கள் நானிலம் வியக்கத் தந்த
கனிதமிழ்ப் பாவை யுற்ற கலக்கமிங் ககற்ற வந்த
மனிதருள் மணியே போல்வீர்! வலமுற வருக! வாழி!

தமிழ்நலம் முகந்து நாளும் தகைமிகுந் தறிவு பூக்க
அமிழ்தெனும் கருத்தைப் பெய்திங் கறப்பயிர் விளைவு செய்யும்
தமிழகப் புலவோ ராய தகுமழைக் குழுவே! இந்த
இமிழ்கடல் உலகம் போற்ற இனிதுசெய் தூழி வாழி!

பழுத்தநல் லறிவாற் பண்டைப் பைந்தமிழ் மரபாற் சீர்த்த
எழுத்தொடு சொல்லால் நாட்டார் எழுச்சிகொள் வகையா லீண்டு
விழுத்தகு பணியே செய்யும் வீறெலாம் பேருக் கொண்ட
தொழத்தகு குழுவே தூய்மை துறைதொறும் வளர்த்து வாழி!

பாடியும் பரிவால் வந்தோர்ப் பற்றியும் பண்பார் உண்மை
நாடியும் நலமார் நூல்கள் நயமுறச் செய்தும் தொன்மை
தேடியும் தமிழிற் காக்கம் செய்வதற் கயர்வில் லாமல்
கூடியும் தொண்டு செய்யும் குழுவினீர் வாழி! வாழி!

தாந்தனிக் கொள்கை நீங்கிச் சமயவாழ் வகத்தே யாக்கித்
தீந்தமிழ் வளர்ச்சி யொன்றே சிந்தையிற் செழிக்கத் தாங்கி
மாந்தரின் வாழ்விங் கோங்க மண்டிலம் ஆள்வோர்க் கீங்கே
ஏந்துறு கொள்கை காட்ட இயைந்தநற் குழுவே வாழி!

துறைதொறுந் தமிழ்த்தாய் ஓங்கத் தொன்சைசாமல் வேந்தர் மூவர்
முறையுற முயன்று கண்ட முத்தமிழ்ச் சங்கத் தேறி
இறைமுதற் புலவோர் கூடி இலக்கண வரம்பு தேர்ந்து
நிறைதமிழ் வளர்த்தார் என்பர், நெடும்புகழ் குறையா வாறு

திகழ்தமிழ்க் கூடல், செம்மை தேர்தமிழ்க் கரந்தை, நன்மை
முகிழ்சிராப் பள்ளி யாய முத்தமிழ்ச் சங்கம் ஏறிப்
புகழ்தமிழ் வளர்க்க முன்போல் புலவர்தங் குழுவைக் கூட்டி
மகிழ்தரும் விசுவ நாத மாண்பனை வாழ்த்து கின்றேம்

பன்னலம் வழங்கி ஓங்கிப் பாரெலாம் செழுமை கூர
மன்னிய கலைகள் தந்து மறுவிலாச் செல்வம் மேவிக்
கன்னியாய்த் துளு தெலுங்கைக் கன்னடம் மலையா ளத்தைத்
தென்னகத் தீன்ற தாயாம் தமிழ்மகள் அருளைப் பெற்ற

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

மேஷம்

இது மேழகம் என்ற தூயதமிழ்க் காரணப் பெயரின் திரிபு. இவ்வாறு திரித்து மேற்கொண்டனர் ஆரியர்.

மேழகம் கம்பளம் தகரே திண்ணகம்

ஏழகம் கடாதுரு ஆட்டின் ஏறே

(பிங்கலந்தை கஎஉ)

இதில் மேழகம் ஆட்டின் பெயராதலை அறிக. மே. அல்லது மேழ் என்று கத்துதலைக் கொண்டுள்ளதால் (மேழகம் என்பது காரணப் பெயர் என்று அறிதல்வேண்டும்.)

வடவரால் திரிக்கப்பட்டதால் மேஷம் என்பதைத் தமிழர்கள் மேற்கொள்ளுவது சிறப்பில்லை. இதுவே அகரத் தொகுத்தல் பெற்று மேழம் என்றும் வரும்; மேடம் என்றும் வரும். இவைகளை எல்லாம் தள்ளுக. மேழகம் என்பதை மட்டும் கொள்ளுக.

மூன்றும் பக்கத் தொடர்...

துழ - (முன்னது) சுழலச்செய்தல் "துடுப்பில் துழந்தவல்சி" (உக)

துலை, தொலை [சுழன்று விரிந்து புறஞ் செல்லல்] புறங்கொடுத் தோடுதல் "ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்" [புறம் எசு] "குறைதல் தொலைவிடத்துத் தொல்படைக் கல்லால் அரிது" [குறள் எசுஉ] சோர்தல் "நாத் தொலைவில்லாய் ஆயினும்" [மணிமே. உசகக] அழிதல் "தொலையாக்கற்ப" [பதிற்றுப்பத்து சரு.கக] முடித்தல்: "தங்கடனை முறை தொலைத்து" (உபதேசகாண்டம் சிவவிரத கூகக) தொலைச்சு (தூரத்தில் வைத்தல்) மிடித்தல், "வெங்கட்டொலைச்சியும்மையார்" (புறம் உக) செலுத்தல், "நறவுநொடை தொலைச்சி" (பெரும் பாண்-கசக) கொல்லுதல்; "முளவுமாத் தொலைச்சிய" (மலைபடு கஎக, துலை, துலா (சுழற்றி ஒருபுறம் வீசுவது உலாஞ்சுவது) நிறைகோல்; ஏற்றமரம், ஒப்பு; "தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்" (குறள் சுஅசு)

இது காறும் ஆராய்ந்தவற்றால் உலவு முதலிய முதல்வரிச் சொற்களே குலவு முதலிய இரண்டாம் வரிச் சொற்களுக்கும் சுலவு முதலிய மூன்றும் வரிச் சொற்களுக்கும் துழவு முதலிய நான்காம் வரிச்சொற்களுக்கும் அடிப்படை என்பதுவிளங்கும். இவ்வுண்மை, உலவு குலவு, சுலவு துழவு என்ற நான்கு சொற்களையும் நேர்வைத்து நோக்கினால் நன்கு புரியும். அன்றியும் இந்த நான்கு சொற்களிலும் உள்ள முதல் எழுத்தை நோக்குக. அவை க். ச். த். என்பவை. இவைகளைநீக்கினால் உலவு என்னும் சொல்லே தோற்றம் அளிக்கின்றது எனவே உலவு என்பது க் என்பதை முதலில் சேர்த்துக் கொண்டு குலவு என்றாயிற்று. ச் சேர்த்துக் கொண்டு சுலவு ஆயிற்று. த் சேர்த்துக்கொண்டு துழவுஎன்றாயிற்று. என்பதை நினைவிற்கொள்க மேலும் செல்லுவோம்.

செல்வரீர் வருக! இந்தத் தென்னகம் தமிழைப் பேணி
நல்வளங் கொண்டிங் கோங்க, நாவலர் புலவர் வாழ
ஒல்வகை தமிழ வேளாம் உமாமகே சுரனார் இங்குக்
கல்வியால் வளர்த்த தஞ்சைக் கரந்தைநற் சங்கத்தே

ஏழிசை வளனும் இன்பார் இயலொடு கூத்தும் மேவி
வாழுநற் றமிழை இந்த வையகம் வாழத் தந்து
வாழிய வளமும் மக்கள் வாழ்த்தும்நற் புகழும் ஏற்று
வாழியிக் குழுவும் சங்கம் வளர்க்குநற் றொண்டும் வாழி!

கரந்தை,
சித்திரை க

இங்ஙனம்,
ச. சுயம்பிரகாசம்.
சங்கத் தலைவர்.

மிக்க சலுகைக்குத் தக்கபயன் கிடைத்தது

சென்ற பொதுத்தேர்தலில் விருப்பினரை நிறுத்தும் வகையில், முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினர்.

தேர்ச்சி பெற்ற சட்டமன்ற உறுப்பினரில் அமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்குமிக்க சலுகை காட்டினர்,

காமராசர் ஆட்சி உறுதிபெற வேண்டும் என்று அல்லும் பகலும் உழைத்த தமிழர் தலைவரையும், தமிழ்ப் பெருமக்களையும் கேலி செய்து கேடு சூழ்ந்து வந்த அமைச்சர்கள் சுப்பிரமணியனையும் பத்தவச்சலத்தையும் விட்டு வைத்த வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினர்.

இங்குள்ள பார்ப்பனரின் கோரிக்கையை எண்ணித் தமிழர் தலைவரையும் தமிழ்ப் பெருமக்களையும் ஒழித்துக் கட்டும்படி சாடை காட்டிய நேருவை மகிழ்ச்சிசெய்த வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினர்.

கெட்டாலும் கிழிந்தாலும் சரி, இந்த நகர சபைத் தேர்தலில் உதவி செய்யும்படி தமிழர் தலைவரை நாம் கேட்டுக் கொள்ளகூடாது என்று கூறிய மடப்பசங்கள் முகத்தில் கான்றுமிழாமல், அவர்களை மகிழ்வித்த வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்க சலுகை காட்டினர்.

எல்லாத் துறையிலேயும், தமிழர்களை ஈடழிக்க வேண்டும் என்று கட்டளையிட்டு, அதன்படி செய்துவரும் நேருவைச் சிறிது திருத்தாமல் அவரை மகிழ்வித்த வகையில் முதல்வர் காமராசர் பார்ப்பனர்க்கு மிக்கசலுகை காட்டினர்.

இவ்வளவு சலுகை காட்டிய முதல்வர் காமராசர்க்குப் பார்ப்பனர் என்ன சலுகை காட்டினர்கள்! சலுகை காட்ட வேண்டாம் கலகம் வளர்க்காமலாவது இருந்தார்களா என்றால் அதுதான் இல்லை.

ஒவ்வொரு பார்ப்பானும் ஒவ்வொரு பார்ப்பனத்தியும் வரிந்து கட்டிக்கொண்டு முதல்வர் காமராசர் ஆட்சி ஒழிந்துபோக வேண்டும் என்பதற்காக, அவரின் எதிர்க்கட்சியாகிய – பார்ப்பானுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக உறுதியளித்த கண்ணீர்த் துளிகளுக்கே தம் வாக்குச் சீட்டைப் போட்டார்கள்; மற்றவர்களையும் போடும்படி தம்மிடத்தில உள்ள அதிகாரத்தை மேற்கொண்டார்கள்.

இன்றைய நிலையில் ஒரு பார்ப்பானிடம், நூற்றுக் கணக்கான தமிழர்களின் குடுமி அகப்பட்டிருப்பதை எவனுல் மறுக்கமுடியும்!

பிச்சை எடுத்துக் கொண்டிருந்த பார்ப்பனப் பசங்களிடமெல்லாம் இன்று அதிகாரம் - அலுவல் திணிக்கப்பட்டிருக்கவில்லையா?

முதல்வர் காமராசர் இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

★ இயக்கத் தலைவர்கள்

★ புலவர்குழு உறுப்பினர்கள்

★ தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள்

ஆகியோரின்

கருத்தோவியங்களைத் தாங்கிக்

“குயில்”

ஆண்டு மலர்

2-6-59-ல் வெளிவருகிறது!

மற்ற விவரங்கள் பின்னர்.

சத்துவக்கும் செம்மல்

ஏ. கே. வேலனுர் வாழ்க!

முன்னும் கொடுத்தார் கரந்தைக்கல் லூரிதான்
முன்னுறவே
பின்னும் கொடுத்தார் புலவர் குழுநலம்
பெற்றிடவே
மன்னும் தமிழ்க்கென்று வாய்மூடு முன்நிதி
வைத்துவிட்டேன்
என்னும்ஏ. கேவேல னுர்வாழ்க செந்தமிழ்க்
கீத்துவந்தே!

இருபத்தை யாயிரம் ஐயா யிரமென
இன்தமிழுக்
கருளிச் சிறந்தார் திரைப்பட வாணிகர்;
ஆக்குநர்; ஆம்
பெருமுத் தமிழிற் புலவர்; பிறர்நலம்
பேணுநல்லார்;
திருவுற்றே கேவேல னுர்வாழ்க நானிலச்
சீர்த்திபெற்றே!

தமிழே தழைக!

29-4-59 புதனன்று காலை 10 மணியளவில் திருச்சிப் புத்தூர் பெரியார் மாளிகையில்
உயர்திரு, சே. மு. அ. பாலசுப்பிரமணியனுர் (இளமுருகு)
அவர்கள் தலைமையில்

இரா. அப்போசிக்கும் மாரம்மாளுக்கும்

நடக்க இருக்கும் திருமணத்திற்குப்
புரட்சிக்கவிஞர் **பாரதிதாசனுர்**
அவர்களின்

வாழ்த்துப்பா

எப்போதும் செந்தமிழ்க்கே தொண்டுசெய்வார்; என்தோழர்
அப்போசி மாரம்மை யன்னம்இவர் – இப்போது
வள்ளல் இளமுருகு வாழ்த்தி மணமுடிக்க
அள்ளினர் வாழ்க்கை அமுது!

ஆரம்மா என்பார்க்கு நான்என்று சோறளிக்கும்
மாரம்மா அப்போசி வாழ்முறையைப் – பாரம்மா
என்று பலரும் இயம்பிடவே பல்லாண்டு
நன்றுவாழ் வார்கள் நயந்து!

வள்ளல் சிவாசி கணேசனர் வாழ்க!

பள்ளியில் மாண வர்கள்
பகலுண வுண்ணும் வண்ணம்
அள்ளிஓர் இலக்கம் ஈந்த
அண்ணல்க ணேசர் இந்நாள்,
புள்ளினம் பாடும் சோலை
மதுரையின் போடி தன்னில்
உள்ளதோர் தொழிற் பயிற்சி
பள்ளிக்கும் ஈத்து வந்தார்!

இன்றீந்த வெண்பொற் காசோ,
இரண்டரை இலக்க மாகும்!
நன்றிந்த உலகு மெச்சும்
நடிப்பின்நற் றிறத்தால் பெற்ற
குன்றொத்த பெருஞ்செல் வத்தை
குவித்தீந்த கணேச னர்போல்
என்றெந்த நடிகர் ஈந்தார்
இப்புகழ் யாவர் பெற்றார்?

தமதென்று வையம் ஆண்ட
தமிழரின் தமிழ கத்தை
எமதென்று பிறரு ரைக்கும்
இழிநிலை போக்க எண்ணுத்
தமிழக நடிக ருக்கும்
தகுதிரைப் படக்கா ரர்க்கும்
இமைதிறந் திடக்,க ணேசர்
இரண்டரை கொடுத்தார் போலும்!

உரிமையும் உயர்வும் கொண்ட
உலகநா டுகள்அ னைத்தும்
கருவியாய்க் கொண்ட ஒன்று:
கல்வியே என்ப தெண்ணித்
திரிபிலா அறிவின் மிக்க
சிவாசிநற் கணேச னரும்
அருவியாய்ச் சொரிந்தார் செல்வம்,
அரும்பயிர்க் கல்வி வேரில்!

தேவைக்கு மேற்கொண் டுள்ள
செல்வம்,தன் நாட்டு மக்கள்
ஆவற்கே சேர்க்க வேண்டும்;
அறம் அஃதே அறிவும் அஃதே
நாவலர் கணேசர் இந்த
நல்வழி கண்டு மற்றும்
ஈவோர்க்கும் வழிகாண் பித்தார்
எந்நாளும் வாழ்க நன்றே!

அடுத்த இதழில்....
பெரிய
கண்ணீர்த் துளியாருக்குக்
கறுஞ்சட்டை எழுதும்
தொடர் கடிதத்தில்
"நோஞ்சபுரம்
அன்னம்மாள்"
திருவாரூர் கே. தங்கராசு
தீட்டுவது.

கட்டண விவரம்

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு.
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

கவிஞரவர்களின்
சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்:

3—5—59 சென்னை நாவரசு மக்கள் காதணி விழா.
5—5—59 எரமலூர்ப் பள்ளி ஆண்டுவிழா.

சிறுவர் பகுதி

சிட்டுக்களும் பூனையும்

(மெய்ம்மூவாறு)

ஙஞண நமன ஙஞண நமன
இரு குருவிகள் கூட்டுக்குள்
இப்படிப் பாடின பாட்டுக்கள்!

யரல வழள யரல வழள
என்றொரு பூனை தூலத்தில்
மெதுவாய் ஏறிய காலத்தில்

கசட தபற கசட தபற
எனப் பறந்தன சிட்டுக்கள்
எதிரில் சன்னல் வெட்டுக்குள்.

தமிழர்களே!

—தென்கச்சி. கோ. சுவாமிநாதன்—

இனத்தை வளர்த்தனர் என்றே இறங்கிய ஆரியர்கள்
சினத்தைக் கொடுத்தனர் சிற்றறி வுள்ளோர் தமிழரிடம்
கனத்த கொடுமையின் கண்ணிய மற்றவர் வாலறுக்கும்
தினத்தை விரைவினில் கண்டிடல் தீதோ? தமிழர்களே!

கற்றதி ருக்குறள் கண்புற நானூ றெனுந்தமிழும்
பெற்றப திற்றெனும் பத்தினும் பெற்றிடு வீரமதால்
உற்றதி ருட்டுடன் வாழ்ந்திடும் குற்றமு டைத்திடுவோர்
நற்றமி ழோங்கிட நாட்டிடை மங்கிடல் வேண்டுமன்றே

ஓங்கித் தமிழகம் வாழ்ந்திட ஆரிய ரால்வலிவு
நீங்கித் துடித்திட நெஞ்சமு டைந்திட நந்தமிழர்
ஏங்கிக் கிடந்திடச் செய்திடு பார்ப்பனர் சூழ்ச்சியினைத்
தாங்கித் தமிழகம் வாழ்ந்திடல் நன்றே? தமிழர்களே!

விற்பனையாளர் தேவை

திண்டிவனம்
விழுப்புரம்
செங்கற்பட்டு
தாம்பரம்
விருத்தாசலம்
திண்டுக்கல்
விருதுநகர்
தென்காசி

ஆகிய ஊர்களில் பொறுப்பும் நம்பிக்கையும் வாய்ந்த முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை.

—அமைச்சர்.

தஞ்சையில் புலவர்குழு

தஞ்சை, சித்திரை, சு

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கப் பொது மன்றத்தில் தமிழகப் புலவர் குழுவினர் குழுமிய போது அன்னூர்க்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் வழக்கறிஞர் திரு. சுயம்பிரகாசம் அவர்கள் சங்கத்தின் சார்பாகவும், புலவர் திரு இரா. ஏகாம்பரநாதன் அவர்கள் மாவட்டத் தமிழாசிரியர் சங்கச் (கழக) சார்பிலும், திரு அ. கு. வேலன் அவர்களும், திரு வேங்கட கிருட்டினப்பிள்ளை அவர்களும், நகர மக்கள் சார்பிலும் வரவேற்புரை கூறினர். குழுவிற்கு முதியவரும், கவிஞரும் ஆகிய திரு பாரதி தாசனார் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தலைவர் பாரதிதாசனார் அவர்கள் தம் முன்னுரையில் தாம் ஆண்டில் முதியவராயினும், உணர்வால் இளைஞரெனவும் முயன்றால் தமிழன் பல்லாண்டுகள் வாழலாம் என்பது தமிழ் மரபெனவும், வேதம் மனிதர்க்கு வயது நூறு என்று கூறும், ஆனால் வள்ளுவர் "கூற்றம் குதித்தலும் கைகூடும்" என்று கூறியுள்ளார் எனவும் இதனையே திருமூலரும் கருதுகின்றார் எனவும் கூறித் தம்முரையை முடித்துக் கொண்டார்.

பின்னர் பூண்டி புட்பம் கல்லூரிப் பேராசிரியர் திரு. கி. கோதண்டபாணி அவர்கள் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் ஒருவர்பின் ஒருவராக அறிமுகம் செய்து வைத்தார்கள், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம் அவர்கள் இக்குழுவைக் கூட்டியமைத்த திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கட்கும் குழுவினர்க்கும் வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

குழுவினர் சார்பில் திரு. ரா.பி, சேதுப்பிள்ளை டாக்டர் அ. சிதம்பரநாதன், டாக்டர் இராச மாணிக்கனார், டாக்டர் துரையரங்கனார் டாக்டர் வ. சுப. மாணிக்கம், திரு. சி. இலக்குவனார், திரு, கி. இராமலிங்கனார் திருவாட்டிகள், காமாட்சி-குமாரசாமி, மேரி மாசிலாமணியம்மையார், திரு க. வெள்ளைவாரணர் முதலியோர் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஏற்ற தொண்டாற்றும் வழிகளைக் கூறி நன்றி கூறினர்.

இறுதியாக முத்தமிழ்க் காவலர் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் புலவர் குழு அமைந்த வரலாற்றையும், குழுவினர் மேற்கொள்ளும் பணி முறைகளையும். அவர்கட்கு ஆகும் செலவிற்குத் தாம் திட்டமிட்டுள்ள நன்கொடைப் பட்டியலையும் கூறித் தமது தொண்டிற்கு ஒத்துழைப்பும் வேண்டினார். அவ்வமயம் திரு அ. கு. வேலன் அவர்கள் தாம் ரூ 5000 குழுவிற்கு நன்கொடையளிப்பதாகக் கூறினார். குழுவின் செயலாளர் திரு ஐயன் பெருமாள் கோனார் அவர்கள் நன்றியுரையுடன் காலை நிகழ்ச்சி முடிவுற்றது. பின்னர் குழுவினர் தனியாகத் தமது ஆய்வுக் கூட்டத்தை நிகழ்த்தினர்.

யானைமேல் பாரதிதாசன்

ஊர்வலச் சிறப்பு

அன்று மாலை 4 மணிக்குத் தமிழகப் புலவர் குழுவினர் ஊர்வலம் செய்வித்துப், பொதுக் கூட்டப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப் பெற்ற காட்சி வியக்கத் தக்கதாகும்!

இரண்டு இலக்கம் தமிழ்ப் பெருமக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். மக்கள் கூட்டம் நடந்துசென்ற காட்சி, கடல் ஒன்று அசைந்து நடந்ததுபோல் தோற்றமளித்தது.

மக்கள் கூட்டத்தின் நடுவில் புலவர் குழுவின் தலைவராகிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் வழி நெடுக மக்களிட்ட மாலைகளைச் சுமந்தபடி யானையின்மேல் அமர்ந்து செல்ல, ஓவியத்தேர் இண்ரடின் நிறைய மற்றப் புலவர் பெருமக்களும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

இரவைப் பகலாக்கின எண்ணிலா விளக்குகள்! பெருவெளியை இசையாக்கின பல்லியங்கள்.

இரவு எட்டுமணியளவில் பொதுக்கூட்டப் பந்தலை அடைந்தது ஊர்வலம்.

கூட்டத்தில், புலவர் பெருமக்கள் பல்லோர் சொற்பெருக்காற்றி உணர்ச்சியை ஊட்டிப் பெருமக்களை - இலக்கக் கணக்காய்

விற்பனையாளர்க்கு

இறுதி அறிவிப்பு.

இதுவரை நமக்குச் சேரவேண்டிய பட்டியல் தொகையை 31-4-59 க்குள் அனுப்பித் தராவிடில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– அமைச்சர்,

திருச்சி,

சி. இந்திராணி **சு. மாமுண்டி**

வாழ்க்கைத் துணைநல விழாவில்

தந்தை பெரியார் - புரட்சிக்கவிஞர்

கருத்துரை.

திருச்சி தில்லைநகர் 'வணக்கம் சரக்கேற்றும் பொறி இயங்கி' உரிமையாளர் திரு. க. சிங்காரவேலு அவர்களின் இல்லத்தில், அவரது மகளார் செல்வி இந்திராணிக்கும், உயர்திரு, வீ. சுப்பிரமணியம் அவர்கள் மகன் செல்வன் சு. மாமுண்டிக்கும் 20-4-59 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் நடைபெற்றது. அந்த விழாவிற்குப் புரட்சிக்கவிஞர், பாரதிதாசன் அவர்கள் தலைமை தாங்கினர்.

கவிஞரவர்கள் தமது முன்னுரையில் தமிழர்க்குரிய வேதங்கள், ஆரிய வேதங்கட்கு முற்பட்டவை என்றும் "தமிழர் நான்மறை" என்று பழைய நூல்களில் பயிலப்படுவதைக் கொண்டே இதை நாம் உணர முடியுமென்றும், வேதவியாசன் காலத்திற்குப் பின்னர்தான் ஆரியர் தங்கட்கு நான் மறை வகுத்துக் கொண்டனர் என்றும் கூறித்தமிழர் வாழ்வியல் கொள்கை அனைத்தும் திருக்குறளில் சொல்லப்பட்டுள்ளதையும் விளக்கினர். மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

கடவுள் கொள்கை உள்ளவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்வோர் உண்மைக்கு மாறான கொள்கைகளை நம்புவோர் ஆவர். ஏனெனில் "மெய்யுணர்வு" பெற்று மக்கட்கு நலந்தரும் செயல்களைச் செய்வதை விடுத்து அன்புக்கும் அருளுக்கும் மாறான வகையில் கோவில்களின் முன்னர் உயிர்ப்பலி நடத்துகின்றனர், அக் கோயில் வழிபாட்டுக்கு வடமொழியே உரித்து எனக் கூறித்திரிகின்றனர் மணவினை - பிணவினை அனைத்திலும் வடமொழியையே ஓதுகின்ற பார்ப்பானை அழைத்து நடத்திக் கொள்ளுதல் தமிழர்க்கு இழுக்குத் தருவதாகும் என்றும் விளக்கிப் பேசினார்கள்.

கவிஞரவர்களின் வேண்டுகோளின்படி தந்தை பெரியாரவர்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தை முடித்து வைத்தார்கள். மணமக்களை வாழ்த்தித் திருச்சி திருமகள் அரிசி ஆலை உரிமையாளர் உயர்திரு சே. மு. அ. பாலசுப்பிரமணியனர் அவர்களும், 'திராவிட ஏடு' ஆசிரியர் திருவாரூர் கே. தங்கராசு அவர்களும் நல்லுரை வழங்கினர்

கடைசியாகத் தந்தை பெரியாரவர்கள் "வாழ்க்கைத் துணை நலம்" பற்றி நீண்ட கருத்துரையாற்றி மணமக்களை வாழ்த்தினார்கள். பெரியாரவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது:- திருமண முறை இரண்டுவகையின. ஒன்று, வைதிகமுறை மற்றொன்று புரோகித முறை. வேதம், புராணம் இவற்றின்படி சூத்திரர் என்போர்க்கு மணமுறை என்பதே கிடையாது. எனவே இன்றுள்ள இந்துச்சட்டப்படியும் தமிழர்க்கு மணமுறை என்பது இல்லை. புரோகித முறைப்படி நடத்தப்படுகின்ற எல்லா வினைகளிலும் முதலில் முப்புரி நூல் அணிவித்து நம்மை இருபிறப்பாளனாக ஆக்கி அதற்குப் பிறகுதான் சடங்கு செய்வார்கள். இப்படிப் பொல்லா வகையிலேயே எல்லாச்செயல்களும் நடைபெறுகின்றன. என்பதாகவும் மற்றும் மணமக்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்வழிகளைக் கூறியும் வாழ்த்தினார்கள்.

கவிஞரவர்களின் முடிவுரைக்குப் பின் மணமகன் சு. மாமுண்டி அவர்களின் நன்றி கூறலுடன் பகல் 1 மணிக்கு மணவிழா இனிது முடிவுற்றது. ★

நிறைந்திருந்தவர்களைக் கடமையில் சேர்த்தனர்.

இத்தகையதோர் பெருங்கூட்டம் முன்னொரு நாள் பெரியார் வரவேற்புக் கூட்டத்திலன்றி - வேறு எப்போதும் கூடியதே இல்லை என்று கூறலாம். இந்தத் தமிழகம் விழித்துக் கொண்டது. தாய்மொழியாகிய தமிழுக்குஇடர் நினைப்பாரைவிட்டு வையாது என்றஎச்சரிக்கையைத் தில்லிக்குக் கூறியது தஞ்சை. (ந. செ.)

பட்டியல் தொகையை அனுப்பாது 'குயில்' வளர்ச்சியைக் கெடுக்கும் விற்பனையாளர்கள்:-

1. புதுமை இலக்கியப் பண்ணை.
416 ஒல்பேந்தால் தெரு -கொழும்பு-13

2. பி. கா. பழநிசாமி.
நகை வியாபாரம், திருப்பத்தூர், வ.ஆ.

தொடரும்.

தமிழ்வாழ்க !

திருவள்ளுவர்யாண்டு 1990 சித்திரைத் திங்கள் 6-ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை (19-4-59)

‘தமிழகப் புலவர் குழு’

தஞ்சைக்கு எழுந்தருளிய காலைத் தஞ்சைமாவட்டத் தமிழாசிரியர்
கழகச்சார்பில் புலவர் குழுவினரைப் பாராட்டி உரைத்த

வாழ்த்தியலின்னுரை

தமிழகப் புலவர் குழுவினரே வருக !

சங்க காலத்திற்குப் பின்னர் கடைச்சங்கத்தின் கண் வீற்றிருந்த தமிழ்ப் புலவர் பெருமக்களைப் போன்று முத்தமிழ் வளர்க்கும் முயற்சியில் முறையொடு குழுமியிருக்கும் காட்சி கண்டு மகிழ்கின்றோம். தஞ்சைப் பெருமக்களின் சார்பில் பாராட்டு நிகழ்வதே சாலும்; ஆயினும் தமிழ்ப் புலமை வாழ்வு நடாத்தி விளங்கும் எம்மனோரை இடித்து “நும்மவர்க்கு நீவிரும் ஒரு பாராட்டுரைத்தல் ஏற்புடைத் தாகாதோ” என்று வினவுவோர்க் கிடனில்லாவாறும், எம்முள்ள நெகிழ்ச்சியும் மகிழ்ச்சியும் தோன்று மாறும் புலமிக்கவரைப் புலமையுடையார் பாராட்டல் தொல்லை மரபு என்பது தோன்றுமாறும், இவ் வாழ்த்தினை எளியமுறையில் கூறுகின்றோம். ஏற்றருள்வீர்களாக.

நிறுத்தற்கியலாவாறு விரைந்து நிலவுலகம் செல்லும்போது நின்றபடியே நிற்க ஒல்லாது உலகத்தோடு ஒட்ட ஒழுகி ஓடும் நிலை இத்தமிழகத்திற்கும் வாய்த்துள்ள இவ்வமயத்தில் தங்களின் பணி பெரிதும் பயன் படுவதாகும். தமிழ்க் குடியில் தோன்றித் தன்னுணர்வு நிரம்பித் தமிழ்ப்பணி புரியும் தலைவர்களாலும் தமிழக ஆட்சிப் பொறுப்பேற்றுச் சலியாது உழைக்கும் தக்கோர்களாலும் இன்று பலதுறைகளிலும் தமிழ் முதலடி எடுத்து முன்னேறுவது கண்டு சிந்தை களிக்கின்றோம். செயற்கரியசெய்ய வீற்றிருக்கும் செந்தமிழறிஞர்களைக் கண்டு வாழ்த்துகின்றோம். வாழியர் நெடிதென

முத்தமிழ்க் காவலர் திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தம் அறுபதாண்டு நிறைவு விழாவின்போது கடைச்சங்கக் காலக்கணக்கை ஒட்டித் தமிழகத்தில் நாற்பத்தொன்பதின்மரைக் கொண்ட ஒரு புலவர்குழு அமைத்தனர். பல நிலைகளிலும் உள்ள தமிழறிஞர்களை அவ்வெண்ணிக் கையுள் அடங்குமாறு சேர்த்துத் தாமே தெளிந்து எழுவகையாற் பிரித்து அமைத்துள்ள முறைகண்டு இறும்பூதெய்துகிறோம். பேரரசர்கள் புலவர் வழிநின்று ஒழுகித் தமிழ்வளர்த்தனர் என்பதை வரலாற்றில் காண்கின்றோம். இன்று முத்தமிழ்க்காவலர் புலவர்கள் வழிநின்று தமிழ் வளர்க்கும் காட்சியை நடைமுறயிற் காணுகின்றோம். வாழ்க அன்னார் முயற்சி!

தமிழக ஆட்சியாளரும் சிறப்பாகக் கல்வியமைச்சர் அவர்களும் நம் தாய்மொழியாம் தமிழ் மொழியை ஆட்சிமொழியாகவும், பயிற்சிமொழியாகவும் ஆக்கிப் பல துறைகளிலும் ஆக்கமுறப் பேரறிஞர் குழுவினைக் கூட்டி அமைத்து நாட்டிற்கு வேண்டியன ஆராய்ந்தமைத்து நலமுறப் பணி புரிவது கண்டு தமிழகம் பெருமகிழ்ச்சிகொண்டு வாழ்த்துகிறது.

தமிழகப்புலவர் குழுவின் சார்பாகவும், தனித்தனியாகவும், தமிழ்நாடு, தமிழர், தமிழ் முன்னேற்றத்திற்காகச் செய்யும் எப்பணிக்கும் எங்கள் ஒத்துழைப்பும் ஆதரவும் என்றென்றும் உண்டென்பதனை உவகையோடு கூறிக்கொள்கின்றோம். தங்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட தமிழாக்க முயற்சியையும் பாராட்டிப் போற்றுகின்றோம். வாழ்க தமிழகப் புலவர்குழு! வளர்க தமிழ்!!

கு. சின்னையன்	**தி. பாலசுப்பிரமணியன்**	**இரா. ஏகாம்பரநாதன்**
அமைச்சர்	பொருளாளர்	தலைவர்

தஞ்சைமாவட்டத் தமிழாசிரியர் கழகம்.

போகவில்லையா?

– திருவையாறு, தமிழ்த்துளி. –

நாட்டைக் காக்கத் தமிழர் கூட்டம்
நன்மை யாக அணிவ குத்துப்
போகின்றதே! – நீங்கள் இன்னும்
போக வில்லையா? – தமிழ்ப்
பொலிவு குன்றின் உங்கள் உள்ளம்
வேக வில்லையா?

மாட்டும் பகையை வாட்டி வீழ்த்த
மறவர் கூட்டம் அணிவ குத்துப்
போகின்றதே! – நீங்கள் இன்னும்
போக வில்லையா? – தமிழ்ப்
பொன்னை இழக்க உள்ளம் ஒன்றும்
நோக வில்லையா?

ஏட்டை விட்டுப் பள்ளி செல்லா
இளைஞர் கூட்டம் அணிவ குத்துப்
போகின்றதே! – நீங்கள் இன்னும்
போக வில்லையா? – தமிழ்ப்
போரிற் பட்டு வீரச் சாவ
சாக வில்லையா?

வீட்டை விட்டுப் பெண்கள் கூட்டம்
வேக மாக அணிவ குத்துப்
போகின்றதே! – நீங்கள் இன்னும்
போக வில்லையா? – தமிழ்
போவ தென்றால் உங்கள் மானம்
போக வில்லையா?

கேட்டை நீக்கத் தமிழர் வீட்டுக்
கிழவர் கூட்டம் அணிவ குத்துப்
போகின்றதே! நீங்கள் இன்னும்
போக வில்லையா? – தமிழ்ப்
போரிற் செல்ல உள்ளம் வீர
மாக வில்லையா?

ஆட்டம் போட்டுத் தமிழர் குழந்தை
ஆடை கட்டி அணிவ குத்துப்
போகின்றதே! நீங்கள் இன்னும்
போக வில்லையா? தமிழ்ப்
புலிகள் நீங்கள்! இருக்க வெட்க
மாக இல்லையா?

★★

திருத்தம்

4-ஆம் பக்கமுள்ள 'கைப்புண் நோக்கக் கண்ணாடியா வேண்டும்' என்ற பாட்டில் 16-ஆம் அடி கையோடு படிப்பாளா என்றிருக்கிறது அதைக் 'கையேடு' படிப்பாளா எனத் திருத்திப் படிக்க.

கருத்துக்குவியல்! சுவைப்பெட்டகம்!
கலை விருந்து!

தமிழ் முரசு

பாரதிதாசன் சிறப்பிதழ்

ஏப்ரல் 29-ந்தேதி பாவேந்தர் பாரதிதாசன்
பிறந்தநாள் விழாவையொட்டி
வெளிவருகிறது!

தமிழக முதலமைச்சர் காமராசர், தந்தை பெரியார், ஆகியோரின் சிறப்புரையும், ஆதித்தனார், கோவை அய்யாமுத்து தேவநேயப்பாவாணர், பாவலர் பால சுந்தரம் போன்றோரின் கருத்துரையும் மற்றும் அரிய கட்டுரைகளும், இதழை அணிசெய்கின்றன.

புதுவைக் கவிஞர்களின் கவியரங்கு
புதுமையான பகுதி!
அதிகபக்கங்கள் — விலை 25 புதுக்காசு
★தனியிதழ் வேண்டுவோர் அஞ்சற்றலை அனுப்புக
விற்பனையாளர்கள் 25 % கழிவு நீக்கி
முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்க!

தமிழ் முரசு அலுவலகம்
- புதுச்சேரி -

சீவுங்கள் தலையை

தமிழ் நாட்டில் இந்தி படிக்கவோ, பேசவோ முற்படுவோரின் தலையைச் சீவ வேண்டும். அல்லது நீர் வாளம் கொடுத்து அவர்களின் இரத்தத்தைக் கக்க வைக்க வேண்டும்.

– ஜி. டி. நாயுடு

(12-4-59 உரையாடலின்போது)

காதல்

- இரா. அரங்கனாதன், நயினார் மண்டபம். -

வேலெனுங் கூர்மைக் கண்கள்;
வேயினைப் போன்ற தோள்கள்,
பாலெனும் மேனி; வெள்ளைப்
பளிங்கினை யொத்த கன்னம்;
கால்களில் சதங்கை கொஞ்சும்;
கனியொக்கும் அதரச் செவ்வாய்;
ஆல்தரும் விழுதாம் கற்றை
அழகிய நீண்ட கூந்தல்!

இடையெனும் ஒன்ற வட்கு
இலையென எண்ணத் தோன்றும்;
உடையவள் அணியும் பாங்கே
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்;
நடையினைக் காணப் பெற்றார்
நம்பிடார் பெண்தா னென்று;
கடைவிழிப் பார்வை யொன்றே
காளையர் உடலை வாட்டும்!

செங்கையில் மலர்பட் டாலும்,
சிவந்திடும் மென்மை; அந்த
நங்கைசெந் தமிழின் பேச்சோ
நல்லிசை யாழை யொக்கும்;
சங்கையால் தலைக விழ்க்கும்
சாயலை, மயில் வியக்கும்.
இங்கங்கும் ஓடும் கண்கள்
இருகயல் மீனை ஒக்கும்!

அன்னவள் விரும்பி வந்தாள்
ஆடவன் ஒருவன் தன்னை;
கன்னலுங் கனியும் போன்றாள்
காதலை யார்தான் வேண்டார்?
மின்னலின் இடையி னாளும்
மேன்மைசேர் அழகன் தானும்
இன்னுயிர் ஒன்றி, அன்பால்
இணைந்தவர் ஆனார் வாழ்வில்.

இருவரின் பெற்றோர் கட்கும்
இவர்களின் காதல் பற்றிச்
சரிவரத் தெரியும் ஆனால்
சமக்கர்கள் சிலரைப் போன்று
சிறிதள வேனுந், தீங்கு
செய்திடும் முறையில் என்றும்
ஒருவரும் எதிர்த்தா ரில்லை;
உண்மைதான்; முற்றும் உண்மை!

தமிழே வாழி!

அண்ணாமலைநகர், தமிழன்பன்

கனிதரும் அமிழ்தே! கன்னற்
சாற்றினிற் சுவையே! கானில்
பனிமல ரொளியே! பாடும்
பைங்கிளிப் பேச்சே! பாகே!
இனிமையின் பிழிவே! பெண்மை
இசைத்திடு பண்ணே! என்றன்
துனிவறு பொருளே! நெஞ்சில்
துலங்கிடுஞ் சுடரே வாழி!

அலைகடற் பாட்டே! ஆசில்
மயில்புரி அழகுக் கூத்தே!
மலையிடைக் காடே! தூய
மலரிடை மணமே! மன்னும்
கலையினிற் பொலிவே! கண்ணே!
கரையறு சுவையின் ஊற்றே!
உலைவறு முண்மை யின்பே!
ஒண்டமிழ்த் தாயே வாழி!

அருவியின் இசையே! பொங்கும்
அழகினிற் சிரிப்பே! ஆர்ந்து
மருவிய தென்றற் காற்றே!
மாசிலாப் பொன்னே! முத்தே!
கருத்தெலாம் கூடி யங்குக்
களிநடம் ஆடும் நல்ல
பெருமைசால் அரங்கே! பேணும்
பெட்புறு தமிழே! வாழி!

விழியினில் காதல் தோய
விருப்புடன் நோக்கி, அன்பு
வழியவே அளவ ளாவி
மகிழுவர்; அவரைப் பார்ப்போர்,
பழியேதும் சொல்லார்; இந்தப்
பாரினில் அவர்கள் காதல்
இழிவெனத் தூற்றார் யாரும்;
ஏனெனில் 'உடன்பிறந்தார்'!

<+>

குயில்

Regd No. M. 7030.

சிறுவர் பகுதி

படிப்பை இகழலாமா?

* * *

பாடம் சொல்லிக் கொடுப்பேன் வாவா
பண்ணியம் எல்லாம் கொடுப்பேன் வாவா
ஆடும் குதிரையும் கொடுப்பேன் வாவா
அட்டைப் பெட்டியும் கொடுப்பேன் வாவா;
ஓடி அழைத்தாள் அக்கா! வந்தே
உட்கார்ந் திட்டாள் தங்கப் பாப்பா
பாடம் சொல்லத் தொடங்கும் முன்னே
பண்ணியம் எல்லாம் வாங்கிக் கொண்டாள்.

பண்ணியம் எல்லாம் உண்டாள் பாப்பா
பாடம் வேண்டாம் என்றாள் பாப்பா
எண்ணிய எல்லாம் பெற்றாள் பாப்பா
ஏனோ பாடம் என்றாள் பாப்பா
பெண்ணா குரங்கா இந்தப் பாப்பா
பிழைசெய் தாளே இந்தப் பாப்பா
கண்ணை இகழ்ந்தாள் இந்தப் பாப்பா
கல்வி இகழ்ந்தாள் இந்தப் பாப்பா

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.